ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2165/23 - 2020 මාර්තු මස 04 වැනි බදාදා - 2020.03.04
2165/23 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: மக/கா/எ/CEB/385.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில், மஹரகம பிரதேச செயலகப் பிரிவின் 526/பீ ஆம் இலக்க, கங்கொடவில தெற்கு கிராம அலுவலர் பிரிவில் மற்றும் கங்கொடவில (மஹரகம நகர சபை எல்லைக்குள்) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள ஆ. வ. ப. 9875 இல் காட்டப்பட்டுள்ள 0.1161 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டின் விபரம் பின்வருமாறு :

***1. துண்டு இல. 01***

காணியின் பெயர் : மில்லகஹ கும்புர அல்லது மில்லகஹதெணிய; விபரம் : தரிசு நிலம் மற்றும் கைவிடப்பட்ட வயல்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: யூ. டீ. ஜானக்க பிரியந்த, இல. 95, பழைய கெஸ்பேவ வீதி, கங்கொடவில, நுகேகொடை; விஸ்தீரணம் : 0.1161 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு மஹரகம பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். உரிமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான காணி உறுதிப்பத்திரங்களும் அவற்றின் மேற்கோள்கள் மற்றும் ஏனைய ஆவணங்களையும் பரிசீலனையின் போது என்னிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

எம். எம். கே. தில்ருக்ஷி வல்பொல,
பிரதேச செயலாளர்,
மஹரகம.

பிரதேச செயலகம்,
மஹரகம,
2020, மாச்சு 03.

3 - 743